**<u>தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்</u>**

செய்தி வெளியீட்டு எண்: 20/2025 நாள்: 27.02.2025

**<u>செய்திக்குறிப்பு</u>**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அறிவிக்கை எண்: 01/2024, நாள் 30.01.2024 இன் வாயிலாக ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு –IV (தொகுதி IV) பணிகளில் அடங்கிய வனக்காப்பாளர், ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர், வனக்காவலர், வனக்காவலர் (பழங்குடியின இளைஞர்) ஆகிய பதவிகளுக்கான காலிப்பணியிடங்களில் நேரடி நியமனம் செய்வதற்கு விண்ணப்பதாரர்களால் சான்றிதழ் பதிவேற்றம் செய்யப்பட்டதில், சான்றிதழ் சரிபார்ப்புக்கு பின்னர் சில விண்ணப்பதாரர்களின் உரிய சான்றிதழ்களை குறைபாடாக / சரியாக பதிவேற்றம் செய்யப்படாமல் உள்ளது கண்டறியப்பட்டுள்ளது. எனவே, இத்தகைய விண்ணப்பதாரர்களுக்கு இறுதி வாய்ப்பு வழங்கும் விதமாக **28.02.2025** முதல் **09.03.2025** இரவு 11.59 மணி வரை விடுபட்ட மற்றும் சரியான சான்றிதழ்களை பதிவேற்றம் செய்ய வாய்ப்பு வழங்கப்படுகிறது. இத்தகவல் அவ்விண்ணப்பதாரர்களுக்கு மட்டும் குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் மூலமாக அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, அவ்விண்ணப்பதாரர்கள் அனைவரும் மின்னஞ்சலில் தெரிவிக்கப்பட்டுள்ள சான்றிதழ்களை தேர்வாணைய இணையதளத்தில் ஒருமுறைப் பதிவு (OTR) வாயிலாக பதிவேற்றம் செய்ய அறிவுறுத்தப்படுகிறார்கள். அவ்வாறு உரிய சான்றிதழ்களை பதிவேற்றம் செய்யாத விண்ணப்பதாரர்களின் கோரிக்கை (claim)/ விண்ணப்பம் நிராகரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அ.ஜான் லூயிஸ், இ.ஆ.ப.

தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்

# TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION

**Press Release No: 20/2025** **Dated: 27.02.2025**

## PRESS RELEASE

The Tamil Nadu Public Service Commission, subsequent to the Onscreen Certificate Verification of documents uploaded by the candidates in respect of Forest Guard, Forest Guard with Driving license, Forest Watcher and Forest Watcher (Tribal Youth) included in the Combined Civil Services Examination –IV (Group – IV Services) (Notified in the Commission's Notification No.01/2024, dated 30.01.2024) has noted that some of the candidates have either not uploaded the required documents within the stipulated time earlier or defective.

In order to provide final opportunity to such candidates, it is directed to re-upload the required / rectified certificates and these candidates are informed through e-mail and SMS to re-upload the required certificates mentioned in the mail through the One Time Registration in the Commission's website, from **28.02.2025** to **09.03.2025** up to 11.59 pm.

Failure to re-upload any of the relevant certificates will result in rejection of their claim / candidature for this post.

A.John Louis, I.A.S.,
Controller of Examinations